Registered as aNewspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (22-5-66) இதழ் 104

பராபவ வைகாசி 9 ஸபர் 1 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

## ஷோம்பே அகற்றப்பட்டார்!

லியப்போல்ட்வில்,மே 21

46 வயதான முன்னுள் பிரதமர்மொஸ்ஷிஷோம்பே பார்லிமெண்ட் ஸ்தானத்திலிருந்து அகற்றப்பட்டார், பார்லிமெண்ட் கூட்ட தொடரில், நாலில் ஒரு பகுதி நாட்களுக்கு ஆஜராகாமல் இருந்தால் ஒருவர் தனது ஸ்தானத்திலிருந்து அகற்றப்படவேண்டுமென்பது கங்கோ அரசியலமைப்

(-5ம் பக்கம் பார்க்க)

### அவசரகால நிலைமை

# நாட்டின் அமைதிக்கு அவசியம் தேவை!

## தணிக்கை விஷயத்தில் பத்திரிகைகளுக்கு சில சலுகைகள்

### எதிர்க்கட்சி விவாதத்திற்கு பிரதமர் பதில்

கொழும்பு, சனி

சதிமுயற்சி சம்பந்தமான புலன் விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும் நாட்டில் இன, மதத்துவேஷத்தைத் தடுப்பதற்கும் அவசரகால நிலைமை அமுலில் இருககவேண்டியது தற்போது அவசியமாகவிருக்கின்றது என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

அவசரகால நிலைமையை ரத்துச் செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்ட விளக்கத்தைக்கொடுத்தார்.

### பத்திரிகை தணிக்கை

பத்திரிகை சம்பந்தமாகப் பிரதம மந்திரி குறிப்பிட்டுப் பேசுகையில், பத்திரிகைகளே தாம் பிரசுரிக்கும் செய்திகளைத் தணிக்கை செய்து பிரசுரிப்பதற்கு வசதியளிக்கும்வகையில் அவசரகாலச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யத்தயாராகவிருப்பதாகவும் ஆனால் இன, மத, மொழி அடிப்படையில் அவசரகாலச் சட்டத்தை மீறியதாக பத்திரிகைகள் கண்டுபிடிக்கப்பட்டால் சட்டத்தின்கீழ் உள்ள தண்டனைகளை அனுபவிக்கவேண்டுமென்றுர்.

### சதிமுயற்சி

சதிமுயற்சி சம்பந்தமாக பாதுகாப்பில் வைக்கப்பட்டவர்களில் சிலர் பிரஸ்தாப சதி நடைபெறவிருந்த இடம், நேரம், திகதி யாவற்றையும் தெளிவாக தமது வாக்குமூலங்களில் தெரிவித்துள்ளனர். இந்த வாக்குமூலப் பிரதிகளை டாக்டர் என். எம். பெரேராவும் பார்வையிட்டுள்ளார். இது ஒன்றே போதும் அவசரகால நிலைமை நீடித்திருப்பதற்கு. இதனை டாக்டர் பெரேரா உணர்வார் என்றே நம்புகின்றேன் என்று பிரதமர் கூறினுர்.

அவசரகால நிலைமை சட்டம் அமுலில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன அரசாங்கம் அரிசி மானியத்தை ரத்துச்செய்தால் அதனை எதிர்த்து மக்கள் கூட்டம் கொதித்தெழுந்து கிளர்ச்சி செய்வார்கள் என்று மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா எச்சரிக்கை செய்தார். தற்போது நாட்டின் மீது அமுலில் இருக்கும் அவசரகால நிலைமையை நீக்குவது சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த பிரேரணையின்மீதான விவாத்தை இன்று பார்லிமெண்

(6-ம் பக்கம் பார்க்க)

## மூளாய் கொலைச் சம்பவம்

### சந்தேகநபர்கள் நீதிபதி முன் சரண்

மாவிட்டபுரம், சனி

கடந்த புதன்கிழமை இரவு மூளாயைச் சேர்ந்த சுப்பர் முருகேசு என்பவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக மரண விசாரணைநடத்திய மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபானு இக்கொலை சம்பந்தமாகச் சங்கானைப் பொலிஸாரால் தேடப்பட்டுவரும் சுப்பர் கணபதி, அவரின் மகனுன தாராசிங் என்றழைக்கப்படும் தெய்வேந்திரம் ஆகிய இருவரையும் கைதுசெய்யும்படி வாரண்ட் உத்தரவு பிறப்பித்திருந்தார். இதனைத் தொடர்ந்து கணபதியும், தெய்வேந்திரமும் நேற்று தங்களின் வழக்கறிஞர் திரு. ஆர்.ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தனர்.

நீதிபதி, கணபதியை ரிமாண்டிலும், தெய்வேந்திரம் 14 வயதிற்கு உட்பட்டவராக இருந்ததால் அவரை அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் இம்மாதம் 23ந் தேதிவரை வைத்திருக்கும்படியும் உத்தரவிட்டார்.



தராதரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்பாக)

## சிறிமாவின் இந்திய யாத்திரை

கொழும்பு,சனி

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா நேற்று பிரதிநிதிகள் சபையில் பேசியபோது திருமதி பண்டாரநாயகா பிரதமராகவிருந்தபோது இந்தியாவுக்கு யாத்திரைசென்றதுபற்றி குறிப்பிட்டார், அவர் கூறியதாவது:—

தனிப்பட்டமுறையில் இந்தியாவுக்குசென்ற அவர் தமது சகோதரர், மகன், இரண்டுபத்திரிகைகள் குமாஸ்தா, எல். ஓ. டி. ஜயசேகர, வெளி விவகார ஆலோசகர் வி. எல். பி. மெண்டிஸ், மக்காள் சீவனரத்வத்தை ஆகியவர்களையும் அரசாங்கச்செலவில் அழைத்துச் சென்றுள்ளார். இந்த யாத்திரைக்கு 4 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கின்றது. ஆனால் ரூபா 3 ஆயிரம்தான் செலுத்தப்பட்டுள்ளது. மீதி அரசாங்கத்தின் தலையில் விழுந்திருக்கிறது. ஆனால் நான் சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பியபோது நானே என்செலவுகளைக் கவனித்துக்கொண்டேன். ஆஸ்பத்திரியில் இருந்தபோதுகூட ஒருசதமே [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## லண்டன் பல்கலைக்கழக பட்டப் பரீட்சைகள்

### தொடர்ந்து நடத்த முடிவு

கொழும்பு, சனி

லண்டன் பல்கலைக்கழக பட்டங்களுக்கான இலங்கையில் நடத்தப்படும் பரீட்சைகள் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன. இந்தப் பரீட்சைகளை நிறுத்துவதற்கு முந்திய அரசாங்கம் செய்திருந்த முடிவை இப்பொழுது அரசாங்கம் ரத்துச்செய்துள்ளது.

லண்டன் பல்கலைக்கழக வெளிமாணவர் பட்டங்களுக்கான வெளிமாணவர் பரீட்சைகளைத் தொடர்ந்து நடத்தும்படி இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு லண்டன் பல்கலைக்கழக வெளிமாணவர் பகுதியின் பதிவாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த முடிவை லண்டன் பரீட்சைகள் நடத்தப்படவேண்டுமென்று கோரிவந்த மாணவர்கள் மத்தியில், குறிப்பாக இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு இடங்கிடைக்காமல் போன மாணவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளனர்.

பொதுவாக யாழ்ப்பாணத்திலிருந்து இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள். ஏனெனில் இந்தப் பரீட்சையின் பட்டம் பெறுவதில் இவர்கள் அதிகம் அக்கறையுடையவர்கள்.

### ஜி. சி. ஈ.

ஜி. சி. ஈ. (உயர்தர)ப் பரீட்சை மீண்டும் லண்டன் பல்கலைக்கழகத்தினுல் நடத்தப்படவிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கின்றது. இந்த பரீட்சைகள் அனேகமாக அடுத்த ஆண்டு மீண்டும் நடைபெறலாமென்று கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் 'ஈழநாடு' நிருபரிடம் கூறினுர்.

## வடக்கு கிழக்கில் சிங்கள ஆசிரியர் நியமனம்

### அரசாங்கம் ஆலோசிப்பதாக கல்வி மந்திரி தகவல்

கொழும்பு,சனி

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும் விஷயம் தேசிய அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருவதாக கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொல்லை இன்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

மூதூர் இரண்டாவது எம். பி. திரு. அப்துல் மஜீத் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே திரு. இரியகொல்லை மேற்கண்டவாறு சொன்னுர்.

எப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களென்று திரு. மஜீத்கேட்டபோது, அரசாங்கத்தின் யோசனையில் இவ்விஷயம் இருந்துவருவதாக கல்வி மந்திரி சொன்னுர்.

## நிர்வாகத்துறை நிபுணர்கள்

கொழும்பு, சனி

மீன்பிடி கைத்தொழில் இலாகாவுக்கு ஆலோசனை கூறுவதற்காக சர்வதேச தொழிலாளர்நலஸ்தாபனம் நோர்வேயைச்சேர்ந்த ஒரு நிபுணரைக் கொடுத்துதவியிருக்கின்றது. மேற்படி இலாகாவில் ஏற்கனவே கடமைபுரியும் இரண்டு நிபுணர்களுடன் இவர் மூன்றுவது நிபுணராக இருப்பார். இவர் கைத்தொழில் நிர்வாகத்துறை விஷயமாக ஆலோசனை கூறுவரர்என்று கருதப்படுகின்றது.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதி அசைஸ் நீதிமன்றம் நேற்றுக்காலை நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யூ. தம்பையா கியூ சி முன்னிலையில்ஆரம்பமானபோது நீதியரசர் விசாரணையை இன்றுகாலை 9-15 மணிவரை ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

விதி என்பது நாம் ஏற்கெனவே செய்த காரியங்களின் தவிர்க்கமுடியாத பலாபலன்களே யாகும். ஆகவே விதி எனப்படுவதை நமது இப்போதைய நன் முயற்சிகளால் நாம் சுலபமாக வென்றுவிடலாம்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 387

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 9 உ. (22-5-66)


## தமிழரும் தமிழும்

மலாயாவிலுள்ள தமிழருக்குப் புதியதோர் ஆபத்து ஏற்பட்டுள்ளதாம். அங்கு தமிழ் வாலிபர்கள் தங்கள்வீட்டிலும் கூட தமிழ் பேசுவதில்லை என்றும், ஆங்கிலம் அல்லது மலாய் மொழியே பேசுவதாயும், ஆங்கிலமும் மெதுவாகக் கைவிடப்படுவதால், இனி அவர்கள் தமிழை அடியோடு மறந்து, மலாய், அல்லது சீன மொழியே பேசக்கூடுமென்றும், மலாயா தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்குச்சென்று திரும்பிய நீதியரசர் டாக்டர் தம்பையாவும், வித்துவான் பொன் முத்துக்குமாரனும் யாழப்பாணத்தில் ஓர் உபசாரக்கூட்டத்தில் பேசுகையில் எச்சரித்தனர். இது பெரிதும் சவலையளிப்பதும் வருந்தத்தக்கதுமான நிலையாகும்.

மலாயாவில் மட்டுமன்றி இலங்கையில் கூட தமிழருக்கு இவ்வித ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நீர்கொழும்பு முதலிய பகுதிகளில் சில வருடங்களுக்கு முன் தமிழராக இருந்தவர்கள் இப்போது தமிழ பேசுவதை மறந்து சிங்களத்தையே வீட்டுமொழியாகக்கொண்டு தமிழ்ப் படிக்க வசதிஇல்லாமற் செய்யப்பட்டதுடன், அரசியல், சமூகக் காரணங்களும் தமிழ் மக்களை வேறு இனமாக மாற்றிவருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த அவல நிலையை மாற்றவும் தமிழ் சமூகத்துக்கு அவ்வித ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கவும் என்னசெய்யவேண்டுமென்பது முக்கியகேள்வி. மலாயாவிலே மலாய் மொழியே அரசாங்க மொழி. இலங்கையில் சிங்களம். ஆகவே அரசாங்க உத்தியோகத்துக்காகபடிப்பவர்கள், அரசாங்க மொழியிலேயே வர வர அதிக மோகங்கொண்டு படிப்பதாயின் அதில் வியப்பில்லை. சிங்களத்தை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயபாடமாக்க வேண்டுமென்று ஒரு யோசனையும் கூறப்படுகின்றது. தமிழ், சிங்களம், ஆங்கிலம் இம் மூன்று மொழிகளையும் இந் நாட்டில் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுமென்பதே நமது கருத்து. அப்போது தான் தேசிய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் பலப்பட முடியும்.

ஆனால் தீவெங்கும் கட்டாயமாகசிங்களமும் ஆங்கிலமும் மட்டும்கற்பித்து, தமிழை தமிழருக்கு மட்டும் போதிப்பதாயின் தமிழ் மொழி இரண்டாம் பட்சமாகி அது படிப்படியாக புறக்கணிக்கப்படவும் கூடும். ஆகவே தேசிய ஒற்றுமையை அரசாங்கம்உண்மையில் விரும்புவதாயின் மூன்று மொழிகளையும் தீவெங்கும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாகக் கற்பிக்க ஒழுங்கு செய்யவேண்டும்.

அது எப்படியாயினும், தமிழ் வளர்ந்தோங்குவதெல்லாம், தமிழரையே பொறுத்துள்ளது. உத்தியோகத்துக்காக வேறு மொழிகளைக் கற்பினும், தமிழர் தங்களுக்குள்ளும் வீட்டிலும் தமிழிலேயே பேசுவதென்றும், தமிழிலேயே கடிதங்கள் எழுதுவதென்றும் உறுதிகொண்டால்தான் தமிழ்வாழும். தமிழ் வாழ்வதும் வீழ்வதும் தமிழர் கையில்தான் உள்ளது. தமிழரே தமிழை எக்காரணத்தாலும் புறக்கணிப்பதாயின், மற்றவர்கள் அதை எப்படிக் கௌரவிப்பர்? அது எப்படிவாழும். மலாயாவைப் போல்இலங்கையிலும் அரசாங்கமொழி வேறாக இருப்பதால், இங்குள்ள தமிழர்கள் இவ்விஷயத்தில் அதிக கவனமாக இருக்கவேண்டிய அவசியம் அதிகமாகும்.

## புதிய வகுப்புவாதம்

இலங்கையிலே வகுப்புவாதத்தை சட்டவிரோதமாக்கி, அதற்குத் தண்டனையும் விதிக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகையில், புதியதோர் வகுப்புவாதம் கிளம்பி விஷமம் செய்வதைப் பார்க்கின்றோம்.

பதிவுப்பிரஜை, கௌரவப்பிரஜை இவர்களைச் சில பத்திரிகைகள் மட்டுமன்றி, அரசியல் தலைவர்களும்கூட பகிரங்கமாகக் கண்டித்து வருவது இப்போது "பாஷனாகி" உள்ளது. கள்ளமார்க்கெட், பதுக்கல், கொள்ளை லாபம் அடிப்பவர் யாராயினும் அவர்களைக்கண்டித்து தண்டிக்கவேண்டியதுதான். ஆனால் அவரை பதிவுப் பிரஜை என்றும் கௌரவப்பிரஜை என்றும்கூறி, ஒருவர் செய்த குற்றத்துக்காக எல்லாப் பதிவுப் பிரஜைகளையும் அவமதிப்பது நேர்மையாகாது.

எந்தநாட்டிலும் ஒரே விதமான பிரஜைகளேயுண்டு. ஆனால் இலங்கையில் மட்டும் பரம்பரை பிரஜை, பதிவுப் பிரஜை, கௌரவப்பிரஜை என்று. பிரஜைகளை மூன்று விதமாகப் பிரித்துள்ளதுதான் இந்தப்புதிய வகுப்புவாதப் பிரசாரத்துக்கு இடமளிக்கின்றது. பதிவுப் பிரஜைகளை இரண்டாம் பட்சப்பிரஜைகளாகச் சட்டம் கருதும்வரை இந்தத் துவேஷப்பிரசாரம் அதிகரிக்கவும், தேசிய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் குலைவதாக இருக்கும். ஒற்றுமையை உண்மையில் வேண்டுபவர்கள், இவ்வித புதிய வகுப்புவாதத்துக்கு இடமளிக்காததுடன், பிரஜைகளிடையேயுள்ள இந்த வேற்றுமைகளைக் கூடிய சீக்கிரம் நீக்கவேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும்.

ஒன்றுக்கொன்று தொடர்புள்ள

# இரண்டு தேவைகள்

— எஸ். சிவசுப்பிரமணியம் —

தமிழ்மக்களுடைய மனதில் இன்று இரண்டு இலட்சியங்கள் இடம்பெற்றுள்ளன ஒன்று தமிழ்ப்பேசும் மக்களுக்கும் பிராந்தியங்களுக்கும் ஒரு மதச்சார்பற்ற பல்கலைக்கழகம் நிறுவுதல். இரண்டு ஓர் இந்துக் கலாச்சார மத ஸ்தாபனம் நிறுவுதல். பின்னது இந்து சமயம் கலாச்சாரம் ஆகியவை பற்றி அறிவூட்டுவதற்கும் கோயில் பூசைகள் முதலிய சமய வைபவங்களில் இந்து குருமாருக்கு பயிற்சி அளிப்பதற்கும் உதவும். தமிழ் பேசும் மக்களில்பெரும்பாலோர் இந்துக்களாயிருப்பதால் அவர்கள் தமிழருக்கு வேண்டிய தேவைகளையும் இந்துக்களுக்கு வேண்டிய தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய மத ஸ்தாபனங்களும் கழகங்களும் ஏற்கனவே நல்ல உறுதியான நிலையில் அமைந்து அவர்களது சமயத்தை பிரசாரம் செய்வதால் அவர்களுக்கென்று ஒரு தனி மத ஸ்தாபனம் அவசியமில்லை. ஒரு கிறிஸ்தவருக்கு இந்துக்களின் மத சம்பந்தமான தேவைகளும் கஷ்டங்களும் தெரியாமல் இருக்கக்கூடும். எனவே அவர்கள் இந்து ஸ்தாபனங்கள் அவசியமில்லை என்று நினைக்கக் கூடும்.

பேராதனையில் ஒரு இலங்கைப் பல்கலைக்கழகம் இருக்கத்தக்கதாக பௌத்தர்களுக்கு சொந்தமாக வித்தியோதய வித்தியாலங்கார என வேறு இரு கலாச்சாரப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கும் பிராந்தியங்களுக்கும் ஒரு பல்கலைக்கழகம் இருப்பது இந்துக் கலாச்சாரத்தையும் சமயத்தையும் வளர்ப்பதற்கு புறம்பான கலாச்சார மத ஸ்தாபனங்கள் இருக்க வேண்டுமென்பதற்கு முரண்பட்டதல்ல. அம்மாதிரி ஒரு கழகமே தேவைப்படுகிறது. பெயர் என்னவாயிருந்தாலும் சரி இந்து தேவைகளுக்கென ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படின் அப்பெயர் சிலசமயம் தமிழருக்கும் இலங்கைக்கும் மட்டுமல்லாமல் இந்துக்களுக்கும் தீங்கிழைக்கக்கூடியதாய் இருக்கும். இன்றைய தேசிய வளர்ச்சியில் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் பிராந்தியங்களுக்கும் இரண்டு தனித்தனி பல்கலைக்கழகங்கள் இருக்கலாம்.

தமிழ்ப்பேசும் மக்கள் (இந்துக்கள் உட்பட) பின்வரும் விடயங்களை விரிவாக ஆராயவேண்டியது அத்தியாவசியம். ஒன்று பல்கலைக் கழகக் கல்வி என்ற முறையில் அவர்களுக்கு வேண்டிய தேவை. இரண்டு கலாச்சார மதத்துறைகளில் அவர்களுக்கு வேண்டியன. யன மூன்று பல்கலைக்கழகத்தினது நோக்கம், வேலைகள் முதலியனபற்றியும் பாடங்களைப்பற்றியும் தெளிவான அபிப்பிராயம் நான்கு. "தமிழ்பேசும் மக்களுக்கு பல்கலைக்கழக" மென்றால் என்ன?, "இந்து கலாச்சாரப் பல்கலைக்கழகம்" என்றால் என்ன? இந்த விஷயங்களை தமிழரும் சிங்களவரும் மற்றவர்களும் அரசாங்கமும் ஊன்றி ஆராயவேண்டும்.

முதலில் தமிழ்க்கல்விமான்களும், மதத்தலைவர்களும் கலாச்சாரத்தலைவர்களும் ஒன்றுகூடி இவ்விஷயங்களை ஆராயவேண்டும். இவ் விஷயங்களைப் பற்றி விசேட நிபுணத்துவமான அறிவையும் பெறவேண்டும்.

இந்த விஷயத்தை அரசியல் கட்சிகளுக்கும் பாராளுமன்ற தலைவர்களுக்கும் முற்றாக விட்டுவிடப்படாது. அப்படி முழுப் பொறுப்பையும் அவர்களிடம் விட்டுவிட்டால் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது சொந்தத் திட்டத்தையே பின்பற்றும். இவ் விடயத்தில் தமிழரின் அரசியல்கட்சிகள் ஒன்றுபட வேண்டியது விரும்பத்தக்கது,

தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் இந்துகலாசார மத ஸ்தபாபனத்திற்கும் எவ்வித வேற்றுமையும் இருக்க வேண்டியதில்லை ஆகையினால் இதில் தமிழ்பேசும்மக்கள் வேற்றுமைப்படுவதற்கும் அவசியமில்லை.

இந்துக்களும் அவர்களுடைய தலைவர்களும் இந்தியாவிலுள்ள பல்கலைக்கழகங்கள், இந்துமதஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அமைப்பையும் செயலாற்றும்முறைகளையும் அறிந்துகொள்ளலாம். இந்துசமுதாயத்தின் முன்னேற்றமும் வளர்ச்சியும் முழுத்தமிழ்பேசும் மக்களின் நலனோடு சம்பந்தப்பட்டுள்ளதென்பதையும் தமிழ்பேசும்மக்களின் நலன் இந்துசமுதாயத்தின் நலனைப் பொறுத்திருக்கிறதென்பதையும் எல்லோரும் உணரவேண்டும்.

தமிழ்மக்களினதும் இந்துக்களினதும் நீதியானகல்வி கலாசாரம் மதம் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்தால்தான் தேசிய ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் வழிதேடலாம் என்பதை தமிழரல்லாதவர்களும் இந்துக்களல்லாதவர்களும் உணரவேண்டும்.

இவ்விரு கோரிக்கைகளையும் தமிழ்ச்சமுதாயம் ஒருமித்துசமர்ப்பித்தால் இரண்டும் நிறைவேறுவதற்குஏற்ற அறிகுறிகள் உள்ளன. இரண்டையும் பிரித்து இருவெவ்வேறு கட்சியினர் சமர்ப்பிக்கப்போனால் இரண்டிற்கும் ஆபத்து ஏற்படலாம்.

இதனால் தமிழ்மக்களிடையே ஏற்கெனவே உள்ள வேறுபாடுகள் மேலும் அதிகரிக்கக்கூடும். இவ்விரு கோரிக்கைளும் வெவ்வேறானவையாயிருந்தபோதிலும் உண்மையில்இரண்டும் ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவை. இரு வெவ்வேறு கட்சிகள் இவ்விரண்டையும் சமர்ப்பித்தபோதிலும் மேலும் தாமதமின்றி நிறைவேற்றி வைக்கப்படவேண்டிய தன்மைகள் அவற்றுள் பொருந்தியுள்ளன.

## சட்டவிரோதிகளுக்கு கைதும் தண்டனையும்

சென்னை, மே 21

1966-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு சட்டவிரோதமாக குடியேற முயன்ற இயக்கத்தில், திடீர்ச் சோதனையின் விளைவாக இரு தரகர்களும் 3 சட்டவிரோதிகளும் கைது செய்யப்பட்டனர்.

அதே மாதத்தில் ஒரு தரகருக்கு 1 வருட கடுங்காவல் தண்டனையும், ரூபா 100 அபராதமும் விதிக்கப்பட்டது. மற்றும் இரு தரகர்களுக்கு 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 5 சட்டவிரோத குடியேற்றகாரர்களுக்கு ரூபா 5 முதல் ரூபா 50 வரை அபராதம் விதிக்கப்பட்டது. ஒருவருக்கு 6 வார கடுங்காவலும், ரூபா 5 அபராதமும் விதிக்கப்பட்டன. (பி. டி. ஐ)

# ஐயாறன் எழுதுவது

வருகிற புதன், வியாழக் கிழமைகளிலே யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக சேக்கிழார் பெருமானின் விழாவை நடத்த விசேஷ ஒழுங்குகள் செய்துள்ளதாகவும் அறிய மிக மகிழ்ச்சி.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, தர்மபுரம், மதுரை, ஆதீன மகாசந்நிதானங்கள், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், முதலிய பல பெரியார்கள் ஆசிச்செய்திகளை அனுப்பியுள்ளதகாவும், இதில் கலந்துகொள்ள சிதம்பரம் அண்ணமலை பல்கலைக் கழக உதவி பேராசிரியர் வெள்ளைவாரணர் வருவதாகவும் அகில இலங்கை சேக்கிழார் மன்ற பொதுக்காரியதரிசியும் 'சிவதொண்டன்' பத்திரிகாசிரியருமான க. இ. நடராஜன் அவர்கள் தெரிவித்து அன்புடன் அழைத்தார்.

வண்ணை சிவன் கோவிலிலிருந்து பெரியபுராண ஊர்வலம், ஊர்வலத்தில் முன்னும் பின்னும், திருமுறை பஜனை கோஷ்டிகள், ஈழத்தில் பல கல்லூரி மாணவர்களின் தேவார இன்னிசைக் கச்சேரிகள், அன்னதானம், சிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள், கொக்குவில் புலவரின் புராண படலம், கருத்தரங்கம், கவியரங்கம், நாடகம் முதலியன இரு நாட்களிலும் நடப்பதாக துண்டுப்பிரசுரங்கள் அறிவிக்கின்றன. டிக்கெட் எதுவுமில்லை.

சாப்பாடும் இலவசம். வண்ணை இந்துக் கல்லூரி பெரிய மண்டபத்திலே நடைபெறும். இவ்விழாவுக்குச்சிறப்பாக சைவர்களும், மாணவர்களும் ஏராளமாக வந்து பயன்பெறுவரென்பதே என் நம்பிக்கை.

ஃ ஃ ஃ

சேக்கிழார் யார்? என்று சில சைவ அன்பர்களைக் கேட்டேன். இந்தப்பெயரை எங்கேயோ கேட்டிருப்பதாயும் ஆனால் அவர் யார் என்பது 'தெரியாதென்றும் சொன்னார்கள்! "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்......" என்ற பாடல் அவர்களுக்குத் தெரிந்துள்ளது. ஆனால் அதைப் பாடியவரைப்பற்றி ஒன்றும் தெரியாது!

ஆனால் நல்லவேளையாக சமயபாடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், சைவ மாணவர்களுக்கு சேக்கிழாரைப்பற்றி சிறிது தெரிந்திருக்கும். சிறந்த தமிழ்இலக்கியமாகிய பெரியபுராணத்திலிருந்து சில பாடல்களை தமிழ் பாடப்புத்தகங்களில் சேர்க்கலாமென்ற யோசனையை ஒருசைவரே எதிர்த்ததாயும், எச். எஸ்.ஸிக்கு இம்முறை சில பாடல்களைச் சேர்த்துள்ளதாகவும் அறிய வந்தேன்.

தமிழும் சைவமும் தமிழருக்கும், சைவர்களுக்கும் மட்டும் உரியதன்று. உலக அறிஞர்கள்பலரும்தமிழைக் கற்றறிய எவ்வளவு ஆவல் கொண்டுள்ளனர் என்பதை கோலாலம்பூர்மகாநாட்டில் அறிய முடிந்தது. அதே மாதிரி பெரியபுராணமும் உலகமக்களின்பொதுச்செல்வம். இதைபல உலகமொழிகளிலும் மொழிபெயர்க்க வேண்டும். அப்போது தான் சைவத்தின் மாண்பினையும், இலக்கிய வாழ்க்கைக்கான புதிய வழியையும் உலகம் அறிந்து பயனடைய முடியும்.

சைவர்களை மதமாற்றம் செய்ய பலர் போட்டா போட்டி போடுகிறார்களல்லவா? அவர்கள்பெரியபுராணத்தைப்படித்து, அதன் பெருமையை உணர்ந்தால்,

(5-ம் பக்கம் பார்க்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்நிறுத்தஷரத்தும், டாஷ்கண்ட் ஒப்பந்தமும் மீறப்படுகின்றன

## இந்தியா - பாகிஸ்தான் பரஸ்பரம் குற்றச்சாட்டு

### கிழக்கு எல்லையில் காரணமின்றி சுடுகிறார்களாம்

வாஷிங்டன், மே. 21

அஸ்ஸாம்—கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானிய படையினர் காரணமின்றி சுட்டதாகவும், தற்பாதுகாப்புக்காக இந்தியப் படைகள் திருப்பிச் சுட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. டாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்குப்பின், பாகிஸ்தானிய படைகள் அகாரணமாகச் சுடுவது இதுவே முதல் தடவை என்றும் கூறப்பட்டது.

அதே சமயம் ஜம்மு காஷ்மீரில் போர்நிறுத்த ஷரத்துக்களை மீறியிருப்தாக இருதரப்பினரும் பரஸ்பரம் குற்றம்சாட்டி இருக்கிறார்கள்.

பாகிஸ்தானிய துருப்புக்கள் மேந்தார் அரங்கில் நிலஅறைகள் அமைத்துவருவதாயும், டாஷ்கண்ட் ஒப்பந்தத்துக்கு மாருக அஸ்ஸாமில் கச்சார்ஜில்லாவிலுள்ள கோவிந்தபூர் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனஎன்றும் இந்தியா கூறுகிறது. ஆனால் பாகிஸ்தான், ஐ. நா. வுக்குச் சமர்ப்பித்திருக்கும் புகார்க் கடிதம் ஒன்றில் இந்தியப் படைகள் காஷ்மீர் போர்நிறுத்தத்தை மீறியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

கடந்த 29-ம் திகதி இந்தியத் துருப்புக்கள் சுட்டது காரணமாக ஒருவர் மாண்டு பலர் காயமடைந்ததாயும், இது சம்பந்தமாக ஐ. நா. பார்வையாளர்களுக்கும் புகார் தெரிவிக்கப்பட்டது என்றும், பாகிஸ்தான் பிரதிநிதி திரு அம்ஜத்அலி, தான் சமர்ப்பித்துள்ள புகாரில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வியட்னும் உள்நாட்டுப்போர்:

# "டாநங் தளத்தை தாக்குவோம்"

### அமெரிக்காவுக்கு பௌத்த தலைவர்கள் எச்சரிக்கை

சைகோன், மே 21

டாநங்கிலிருந்து கிளர்ச்சித் துருப்புக்களை அகற்ற அமெரிக்கா உதவிபுரியத் தவறினுல், அங்குள்ள அமெரிக்க விமானதளத்தை தாக்கப்போவதாய் பௌத்தர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்கள்.

பௌத்த தலைவர் திரிகுவாங் ஜனதிபதி ஜோன்ஸனுக்கு இது சம்பந்தமாக மீண்டும் தந்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார். இதற்கிடையில் டாநங் நகரில் புதிய சண்டை உத்வேகத்துடன் ஆரம்பித்திருக்கிறது. அரசாங்கத் துருப்புக்கள் டாங்கிகளின் உதவியுடன், பிரதான பௌத்த எதிர்ப்பு பகோடாவிலிருந்து 300 யார் தூரத்திலிருப்பதாய்க் கூறப்படுகிறது.

பகோடா தாக்கப்பட்டால் தற்கொலை செய்துகொள்ளப்போவதாய் அங்குள்ள பௌத்தர்கள் பயமுறுத்தியிருக்கிறார்கள்.

அதே சமயம் சைக்கோனில் 1500 பௌத்த இளைஞர்கள் தீவர்த்தி ஊர்வலத்துடன் கீ அரசாங்கத்தை ராஜிநாமா செய்யும்படி கூறினார்கள். பொலிசாருக்கும் அவர்களுக்கு மிடையே கைகலப்பு ஏற்பட்டது.

டாநங்கில் ஏற்பட்ட புதிய சண்டையில் 25 பேர்கொல்லப்பட்டதாயும், 100க்கு அதிகமானோர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

அங்குள்ள அமெரிக்ர்களை வெளியேற்றும் யோசனை இன்னும் பரிசீலனையில்இருப்பதாக வாஷிங்டன் அறிக்கைகள் கூறுகின்றன.

நேற்றைய தாக்குதலில் அரசாங்க விமானங்கள் பீரங்கிகளையும், ராக்கெட்டுகளையும் உபயோகித்தன என்றும், சைகோனிலிருந்து மேலும் துருப்புக்கள் அங்கு அனுப்பப்படவிருப்பதாயும் கூறப்பட்டது.

ரொடீஷியா

## முதல் சுற்றுப்பேச்சு முடிவு

நியுயோர்க், மே 21

ரொடீஷியா சம்பந்தமான பாதுகாப்புச் சபைக் கூட்டம் அடுத்த திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் லண்டனில் நடைபெற்ற ரொடீஷியப் பேச்சுக்கள் முடிவடைந்திருக்கின்றன. ரொடீஷியத் தூதுகோஷ்டி இன்று தாயகம் புறப்படுகிறது.

அடுத்த இரு வாரங்களில் இந்தப் பேச்சுக்கள் மீண்டும் ஸாலிஸ்பரியில் ஆரம்பமாகும்.

டில்லி வரும்

## இந்தோனேஷிய கோஷ்டி

புதுடில்லி, மே 21

இந்தியாவிடமிருந்து ரூ. கோடி கடன்பெறுவது பற்றிப் பேச்சு நடத்த இந்தோனேஷிய துணைப்பிரதமர் தலைமையில் தூது கோஷ்டியொன்று [illegible] டில்லி வரவிருக்கிறது.

## சீனர் தலைவர் கண்டனம்

கல்கத்தா, மே 21

சீனு 3வது அணுகுண்டை வெடித்தது குறித்து இந்தியாவிலுள்ள சீனர்கள் சங்கத் தலைவர் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

கல்கத்தாவில் நடைபெற்ற சீனர்களின் கூட்டத்தில் அவர் பேசியபோது உலக பொதுசன அபிப்பிராயத்தை துச்சம்செய்து சீனு இத்தகைய செயலில் ஈடுபட்டதாய்க் குறிப்பிட்டார்

சீன-பாகிஸ்தான் கூட்டுறவு ஆசிய நாடுகளுக்கு ஆபத்தானதென்றும் அவர் கூறினார்.

## பம்பாயில் காங்கிரஸ் கமிட்டி

பம்பாய், மே 21

அகில பாரத காங்கிரஸ் கமிட்டி இன்று காலை பம்பாயில் கூடி நாட்டின் பல்வேறு பகுதிகளிம் நிலவும் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பது பற்றி விவாதித்தது.

தனியார் தீர்மானத்திற்கு ஒரு முழுநாள் ஒதுக்கப்படுமென தலைவர் காமராஜர் அறிவித்திருக்கிறார்.

சீனவை

## பிரான்சும் பின்பற்றும்

பாரிஸ், மே 21

பல உலக நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும், பிரான்ஸ் தனது அணுசோதனையை தென்பசிபிக்கில் நடத்தும். ஜூலை மாத ஆரம்பத்தில் இது நடத்தப்படும்.

பிரான்சின் அணுசோதனை விளைவு குறித்து பெருநாட்டின் தலைநகர் லீமாவில் 13 அணுசக்தி விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள்.

## சர்வதேச ஹாக்கி

ஹாம்பர்க் மே 21

இங்கு நடைபெறும் சர்வதேச ஹாக்கி போட்டித் தொடரில் இந்தியாவும் மேற்கு ஜெர்மனியும் உச்சகட்டத்திலிருக்கின்றன,

கென்யா 2—0 கோல்களினல் ஆஸ்திரியாவை வென்றது.

பெல்ஜியம் 1—0 கோலினல் பிரான்சை வென்றது.

பிரிட்டன் 3—0 கோல்களினல் சுபிட்ஸர்லந்தை வென்றது.

## கயானு

லண்டன், மே 21

அடுத்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் கயானுவின் சுதந்திரதினத்தில் மகாராணியின் சார்பாக கென்ட் கோமகன் கலந்துகொள்வார். சுதந்திர வைபவத்தில் கலக்க [illegible] நாடு ரஷ்யாவாகும்.

## கிரீஸின் பகல் வானத்தில் நட்சத்திரக் கூட்டங்கள்!

ஏதென்ஸ், மே 21

நேற்று கிரீஸ் நாட்டை சூரிய கிரகணம் பூரணமாக மறைத்தது. இருள் சூழ்ந்ததால் வானத்தில் நட்சத்திரங்கள் தென்பட்டன.

இதை அவதானித்த அமெரிக்க, ஐரோப்பிய விஞ்ஞானிகள் 7 ராக்கெட்டுகளைச் செலுத்தி சூரியனை ஆராய்ந்தனர்.

இந்தியாவில் தென்பகுதி நீங்கலாக இதர பகுதிகளில் ஓரளவு கிரகணம் தெரிந்தது. இதில் அதிக அளவு சூரியனை மறைத்த இடம் காஷ்மீர். அங்கு 3-ல் 1 பகுதி சூரியனில் இருள் காணப்பட்டது.

குருக்ஷேத்திரம், காசி, பிரயாகை, கல்கத்தா ஆகிய இடங்களில் பல லட்சக்கணக்கான மக்கள் கிரகணத்தை முன்னிட்டு புனித நீராடினர்.

## திங்கட்கிழமை மலேஸிய- இந்தோனேஷிய பேச்சு?

கோலாலம்பூர், மே21

அடுத்த திங்கட்கிழமை தாய்லந்து தலைநகர் பாங்காக்கில் மலேஸிய—இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரிகளின் பேச்சு ஆரம்பமாகலாம் என இங்கிருந்து கிடைக்கும் உத்தியோகப்பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

ஆனல் ஜாகர்த்தா ரேடியோவின் அறிவிப்புப்படி, இந்தப் பேச்சுக்களுக்கான காலம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. பாங்காக்கில் அல்லது ரங்கூனில் பேச்சு நடத்தலாமென இந்தோனேஷியா கூறுவதாக அறிவிக்கப்பட்டது.

சமரசப்பேச்சில் இருபகுதி துருப்புக்களும் எல்லைக்கப்பால் குறிப்பிட்ட தூரம் வரை வாபஸ் பெறவேண்டுமென தாய்லந்து சிபார்சு செய்யும் எனத் தெரியவருகிறது.

மலேஸிய தூதுகோஷ்டியை பாங்காக் கொண்டு செல்ல விமானம் ஒன்று தயாராக வைக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

பேச்சு வார்த்தைகள் வெற்றிபெற்ருல் இருநாடுகளுக்குமிடையேயான மூன்றுண்டுக்கெடுபிடி நிற்கும் என்றும், சுகர்னே—துங்கு பேச்சுக்கு இது வழிவகுக்கும் என்றும் மேலும் கூறப்பட்டது.

இந்தோனேஷியாவின் பொருளாதாரம் இந்தக் கெடுபிடிகாரணமாக உதியளித்துக்கொண்டு வருகிறது.

## 58 ஆண்டுகளுக்கு பின்...

லண்டன், மே 21

58 ஆண்டுகளுக்குப் பின் பிரிட்டனில் முதலாவதாக நடைபெறும் கிளே-கூப்பர் குத்துச்சண்டை ''ஏர்லி பேர்ட்'' அமெரிக்க வான்வெளிக் கிரகத்தின் மூலம் ஐரோப்பாவின் பலநாடுகளிலும், அட்லாண்டிக் கடலுக்கூடாக அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோ உள்ளிட்டு வேறுபலநாடுகளிலும் டெலிவிஷனில் காட்டப்படும்.

## அரிசிமூடை விழுந்து தொழிலாளி மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாதகலைச் சேர்ந்த க. ஏகாம்பரம் (23வயது) என்னும் தொழிலாளி முருங்கனில் அரிசிமூடை இறக்கிக்கொண்டிருக்கையில் மூடை ஒன்று எதிர்பாராதவிதமாக அவரின் தலையில்விழுந்து பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இங்கு மரணமானர்.

இவரது மரணம் குறித்து பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் என். விவேகானந்தன், பண்டைஉடைந்து வெடிப்பு ஏற்பட்டு மூளை தாக்கப்பட்டதால் மரணமானுர் என்று கூறினர். மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் விபத்தினுல் ஏற்பட்டமரண மெனத்தீர்ப்பளித்தார்.

## 'ஊழியர்நலன் பாதிக்கப்படக்கூடாது'

யாழ்ப்பாணம், சனி

''உப்புக் கூட்டுஸ்தாபனத்தை அமைக்கும்போது தற்பொழுது உப்பு இலாகாவில் கடமையாற்றும் ஊழியர் எவருக்கும் எவ்வித கஷ்டமும் ஏற்படாவண்ணம் மாற்றங்களைச் செய்யவேண்டும்'' என்று அரசாங்க பொதுச் சேவையாளர் விசேஷ பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அரசாங்க உப்பு உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தலைவர் திரு. கா. இராசேந்திரா பேசுகையில்குறிப்பிட்டார்.

கடந்த 45 வருடங்களாக உப்பு இலாகா இயங்கி வந்த பொழுதிலும் இப்பொழுது ஒரு கார்ப்பரேஷனை நிறுவ வேண்டிய அவசியம் ஏன்ஏற்பட்டுள்ளது என்பது பற்றியும்அவர்தெரிவித்தார்.

அரசாங்கஉப்புதொழிற்சங்கத்தலைவர் திரு. தில்லையம்பலம் பேசுகையில், தற்பொழுதுள்ள குறைபாடுகளை நிவிர்த்தி செய்து புதிய கூட்டுஸ்தாபனத்தை அமைத்தால் தொழிலாளர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கத்தவற மாட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

## காலரா அபாயம்!

கொழும்பு, சனி

கலாவானைப் பகுதியில் காலரா பரவியிருப்பதாகக் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக விசாரணைகள் நடத்துமாறு இரத்தினபுரிசுகாதார சேவைகள் சுப்பிரிண்டனை சுகாதார அமைச்சுகேட்டுள்ளது.

கலாவானையிலுள்ள பொத்துப்பிட்டியாவில் காலரா நோய் அறிகுறிகளுடன் ஐவர் மரணமானதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரத்தில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலை

## கரைச்சி கி. சபை ஆரம்பித்தது

கிளிநொச்சி, சனி

''உருத்திரபுரம் கிராம மக்களுடைய வசதிக்காக கரைச்சிக் கிராமசபை இந்த இலவச ஆயுள்வேத வைத்தியசாலையை ஆரம்பித்துள்ளது. இது இக்கிராமத்தைச் சுற்றியுள்ள சிவநகர், குஞ்சுப்பரந்தன், ஜெயந்திநகர், புதுமுறிப்பு, கணேசபுரம், கனகபுரம்பகுதி கிராம மக்களுக்கும் உதவியாய் உள்ளது. இந்த இலவச ஆயுள்வேத வைத்தியசாலையைக் கொண்டுநடாத்த வருடம் தோறும் பத்தாயிரம் ரூபாவுக்குமேல் தேவை. இதைக் கரைச்சிக் கிராம சபயின் பொதுவருமானத்தி லிருந்து செலவுசெய்கிறோம்'' என்று கரைச்சிக் கிராமசபைத்தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திரு. இ. இரகுநாதன் தலைமைவகித்தார். உருத்திரபுரம் சனசமூகநிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு ஆண்களும் பெண்களுமாக ஏராளமான கிராமவாசிகள் வந்திருந்தார்கள்.

கிராமசபைத் தலைவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கரைச்சிக் கிராமசபை பரந்தன், புளியம்பொக்கணை, வட்டக்கச்சி, உருத்திரபுரம், அக்கராயன்குளம் ஆகிய இடங்களில் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையை அமைப்பதெனத் தீர்மானித்துள்ளது. அக்கராயன் குளத்தில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இடவசதி கிடைத்ததும் ஆரம்பிக்கப்படும்.

கரைச்சி கிராமசபைக்கு கிளிநொச்சி சந்தையாலும், படமாளிகைகளாலுமே லட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் வருகின்றது. இந்த வருமானம் கரைச்சிப்பகுதி ஏழைமக்களுடைய இரத்தமேயாகும். இதை பரவலாக ஏழைமக்கள் — கிராமமக்கள் அனுபவிக்கத்தக்கதாக இத்தகைய வசதிகளை கிராமசபை செய்கின்றது. கரைச்சிக் கிராமசபையைப் பட்டின சபையாகவும் வேறு இரு கிராம சபைளாகவும் பிரித்துவிட்டால் கதி என்னவாகும். மொத்தம் 19வட்டாரங்களில்2அல்லது 3 வட்டாரப் பகுதிக்குள் சந்தையும்படமாளிகைகளும் அடங்கும். இவற்றைப் பிரித்து பட்டினசபையாக்கினுல் கரைச்சிப்பகுதிமுழுவதிலும் உள்ள ஏழைமக்கள் இரத்தத்தை, கிளிநொச்சிப்பகுதி மட்டும் அனுபவிக்கக்கூடியதாகிவிடும். ஏனைய வட்டாரங்களை 2 கிராமசபைகளாக அமைத்துக்கொண்டால் அப்பகுதிமக்கள் நட்டாற்றில் கைவிடப்பட்டவர்களாவார்கள்.

ஆயுள்வேத வைத்தியர் எஸ். வி. மாசிலாமணி, திரு. ச. அந்தோனிப்பிள்ளை, திரு. சி. க. வேலாயுதபிள்ளை, திரு. சி. வ. கந்தையா, திரு. நா. கதிர்காமத்தம்பி, திரு. யே. ஈ. செபஸ்தியாம்பிள்ளை, வண. பிதா. நீ. ம. சரவணமுத்து, டாக்டர் எஸ். வி. மூர்த்தி, திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினுர்கள். உருத்திரபுரம் சனசமுகநிலையத் தலைவர் திரு. எஸ். கந்தையா நன்றிகூறினுர்.

# வளர்ந்தோர்கல்விபற்றி உதவி வித்தியாதிபதி

சாவகச்சேரி, சனி

ஐம்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு வளர்ந்தோர் கல்வி நிலயங்கள் அவசியம் என்ற கருத்து தவருனது. முப்பதைந்து வயதுக்கும், ஐம்பது வயதுக்குமிடைப்பட்டோருக்கே வளர்ந்தோர் கல்வி தேவையானதாகும் என்று உதவி வித்தியாதிபதி திரு. டி. ஏ. குலதுங்கா கூறினுர்.

சரசாலை ஸ்ரீ கணேச வளர்ந்தோர் கல்வி நிலையத்தை உதவி வித்தியாதரிசிகள் டி. ஏ குலத்துங்க, எம். ஏ. வர்ணசூரியா ஆகியோரின் ஒன்பது வித்தியாகந்தோர் உத்தியோகத்தர்களும் பார்வையிட்டபின்னர் நடைபெற்ற மகாநாட்டில் பேசுகையிலே திரு. குலதுங்கா மேற்கண்டவாறு சொன்ஞர்.

மகாநாட்டிற்கு திரு. செ. சிவப்பிரகாசம், ஸ்ரீகணேச வித்தியாசாலை தலைமை ஆசிரியர் தலைமை வகித்தார்.

வித்தியாதிபதி திரு. குலத்துங்க மேற்படி வளர்ந்தோர் கல்வி நிலை ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டினுர்.

---

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு க்ஷய ரோக நிவாரண தேசிய சங்கத்தின் பரிசளிப்புவிழா 30ந்திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

# கூட்டுறவு அடிப்படையில் நாடகங்கள் வேண்டும்

## எழுத்தாளர் யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பல்வேறு கலைத்துறை சம்பந்தப்பட்டவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலும், தங்கள் சகோதரக் கலைஞர்களின் ஆக்கங்களைத் தெரிந்து கொள்ளாமலும் மூவர்க்கொருவராக இயங்கிக் கொண்டிருந்த துரதிர்ஷ்டமான சூழ்நிலை இன்று வெகு வேகமாக யாழ்ப்பாணத்தில் மறைந்துகொண்டுவருகின்றது. இந்த மாற்றம் கலைக்கும், கலைஞர்களுக்கும் நல்லது. கலைஞர்களின் பரஸ்பரத் தொடர்பால் ஏற்படும் இந்தக் கருத்துப் பரிமாற்றங்கள் வளர்ந்துவரும் ஈழத்துக் கலைகளுக்கு நல்ல எதிர்காலம் உண்டென்பதைக் காட்டுகின்றது'' என்று யாழ். தியாகு நாடகமன்றம் தயாரித்து அளித்த 'ஆனந்தக் கண்ணீர்' என்ற நாடகத்திற்குத் தலைமைவகித்துப் பேசும்போது திரு. டொமினிக் ஜீவா குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் சினிமாவின் ஆதிக்கம் நமது ரசனையைத் தாக்குவதற்கு முன்னர் தமிழகத்திலிருந்து வந்த பிரபல நாடக நடிகர்களான கே. பி. சுந்தராம்பாள், கிட்டப்பா, விஸ்வநாததாஸ் ஆகிய கலைஞர்கள் யாழ்ப்பாணத்து ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்ற பின்னர்தான் தமது துறையில் பிற்காலத்தில் பிரபலம் பெற்ருர்கள். இதை அவர்களே தமது பேட்டிகளில் கூறியுள்ளார்கள். நமது கலை ரசனைப் பாரம்பர்யத்தை மீண்டும் நாம் நிலைநிறுத்தவேண்டுமாஞல் நாடகங்கள் தரமானதாகவும், திட்டமிட்டும் கூட்டுறவுடனும் தயாரிக்க வேண்டும் என்றும் கூறினுர்.

# ஸ்தலஸ்தாபன அமைச்சில் புதிய பிரிவு

பம்பலப்பிட்டி, சனி

ஸ்தலஸ்தாபன ஊழியரின் சேவை, அவர்களின் நலன் பற்றிக் கவனிக்கவென ஸ்தலஸ்தாபன அமைச்சில்புதிய பிரிவொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பார்லிமெண்டில் வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷன் மசோதாவில் ஊழியரின்சேவை, புதிய நியமனங்கள் பற்றி கவனிக்கவென ஒரு புதிய பிரிவை ஆரம்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஊழியரின் நியமனம், இடமாற்றம், சேவை நிபந்தனைகள் ஆகியவற்றை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் உதவியுடன் இதுவரையறுக்கும். குறிப்பிட்ட கமிஷன் அங்கத்தவர்களை புதியமசோதாவிற்கிணங்க மந்திரியே நியமிப்பார்.

# நிரந்தரக் காரியதரிசிகளுக்கு உஷார் உத்தரவு

பம்பலப்பிட்டி, சனி

அரசாங்க ஊழியர்களுக்கான ஒழுங்கு விதிமுறைகள் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள், உத்தரவுகள் ஆகியவை களவாடப்படுவதாகத் திறைசேரிக் காரியதரிசி திரு. ஜினதாஸ சமரக்கொடி சகல நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அறிவித்துள்ளார். இதுபற்றி வெகுகவனமாக இருக்குமாறு அந்த உத்தரவில் கேட்கப்பட்டுள்ளது.





லக்ஷபான பாட்டரிகள்

இறக்குமதியாகும் எந்த பாட்டரியையும் விட குறைந்த செலவில் கூடிய சேவை தருகின்றன.

ஏனெனில்:

- அவை, பூரண சக்தியுடன் தொழிற்சாலையிலிருந்து புதுமை குலையாமல் உங்களை வந்தடைகின்றன. இறக்குமதிபாட்டரிகள் போல சேமிப்பில் இருப்பதால் அவை சக்தி இழப்பதில்லை
- லக்ஷபானுபாட்டரிகள், சர்வதேச மின் நுணுக்க கமிஷன்விதிக்கும் தரங்களுக்கு நிகரான, அதி உன்னத சிறப்பு வாய்ந்தவை என்று பரீட்சித்து நிரூபிக்கப்பட்டவை.
- லக்ஷபானு பாட்டரிகள் இறக்குமதியாகும் எந்த ரகங்களையும் விட மிக மலிவானவை.

எலிபண்ட் லைட் கார்ப்பரேஷன் லிமிட்டெட்





சுமித்தியன்

காய்கறிப் பீடைகளை ஒழிக்கும் சர்வ கிருமி நாசினி

கிருமிகளை நாசம் செய்வதும் அதே சமயம் மனித பாவனைக்குப் பாதுகாப்பானதும் என்று முற்றிலும் நிரூபிக்கப்பட்ட கிருமி நாசினி இதோ வந்திருக்கிறது. கோஸ் கிரைவகைகள, பூசினி, புடோல் போன்ற காய் ரகங்கள், மிளகாய் மற்றும் காய்கறிகளையும், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, நிலக் கடலை, சிட்ரஸ், முதலாம் எலுமிச்சை ரகங்கள், மா, அன்னுசி போன்ற பழ விருட்சங்கள், அலங்காரச் செடி கொடிகள் ஆகியவற்றையும், அரித்தும் சாரம் உறிஞ்சியும் பாதிக்கும் சகல பீடைகளையும் ஒழித்துக் கட்ட சுமித்தியன் சிபாரிசு செய்யப்படுகிறது.

சுமித்தியன் உபயோகியுங்கள்- அது பாதுகாப்பானது, செயலவன்மை வாய்ந்தது.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL

ரசாயனப் பொருள் என்றதும் நினைவில் வருவது ஷெல்.

'அல்றெக்ஸ்,' 'டீல்றெக்ஸ் 20,' 'டீல் றெக்ஸ் எக்ஸ்ட்ரா,' 'என்றெக்ஸ் 20,' 'ஆர்கொடீன்,' 'பொஸ்றின்,' 'பிட்றின்,' 'மலதியன்,' ஷெல் களைப்புற்கொல்லி எம் 50, ஷெல் களைப்புற்கொல்லி ஆர் 25, 'கிறமவின்,' ஷெல் பீ. எச். சி. 10% தூள். இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருள்களில் சில மாத்திரமே.

GRANTS 2602


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## அறிவித்தல்

'ஈழநாடு' பத்திரிகையைப் பின்வரும் இடங்களில் விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை.

1. தோலகட்டி
2. பூநகரி
3. முருகண்டி

விபரங்கட்டு விநியோக மனேஜர் 'ஈழநாடு' லிமிட்டெட் த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 425

## அறிவித்தல்

பல்லவராயன் கட்டுக் கிராமசபை நாச்சிக்குடா மீன்பிடி இலாக்கா ரேட்டமைப்புவேலை மீண்டும் ஒப்பந்தம் அழைக்கப்படுகின்றது. உள்ளூராட்சிப் பகுதியில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவு பெற்றவர்களும், இதற்குமுன் கிராமவேலைகள் ஒப்பந்தங்கள் எதுவாகினும் நிறைவேற்ருது... உள்ளூராட்சி அதிபர் அவர்களால் கிராமவேலை ஒப்பந்தம் செய்ய தகுதியற்றவர் என நீக்கப்படாதவர்களும், கேள்விப்பத்திரம் பெறும் உரிமையுடையர்.

1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 9, 11, 12-ம் திகதிகளில் காலை 10 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணி வரைக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். 15-6-66-ம் திகதி காலை 11 மணிக்குப் பிந்தாமல் கேள்விப்பத்திரங்கள் கி. ச. அலுவலகத்தில் அக்கிராசனரிடம் கொடுத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் விலை ரூபா 5.00
கேள்விப் பிணைப்பணம் ரூபா 50.00

இன்னும் வேண்டிய விபரங்களை கிராமசபை விளம்பர இடத்திலும் வடபிரதேசம் உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்கள் அலுவலகத்திலும் இவ்வேலையைக் குறித்த விளம்பரத்தில் கண்டறிந்து கொள்ளலாம்.

சி. முகம்மது அப்துல் காதிர், ஒப்பம்,
அக்கிராசனர்
பல்லவராயன் கட்டுக் கிராமசபை
கி. ச. அலுவலகம்,
வேரவில்.

20-5-66. 426

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானை முருகமூர்த்தி கோவில் மகோற்சவம் இன்று கொடியேறி தொடர்ந்து பத்து நாட்கள் வரை நடைபெறும்.

## மட்டக்களப்பில் சுவீப் இழுப்பு

பம்பலப்பிட்டி, சனி

ஹில்மன் டிலக்ஸ், றீஜேல்ட் கோர்டினி ஆகிய இருகார்களுக்குமாக இம்மாதம் 27-ந் திகதி இழுக்கப்படவிருக்கும் தேசிய லொத்தர் சபையின் சுவீப் டிக்கட்டுக்கள் இதுவரையில் ஏராளமாக விற்பனையாகியுள்ளதாக தேசிய லொத்தர் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதுவரை சுமார் ஒரு கோடி ஐம்பது லட்சம் டிக்கட் க்கள் விற்பனையாகியுள்ளன.

குறிப்பிட்ட பரிசுகளுக்கான சீட்டிழுப்பு மட்டக்களப்பு முற்றவெளியில் நடைபெறும். முதற்பரிசுக் காருக்கான டிக்கட்டை மட்டக்களப்பு எம். பி. திரு. ஸி. இராசதுரையும், இரண்டாவது பரிசுக் காருக்கான டிக்கட்டை மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. திரு. சின்னலெப்பையும் இழுப்பார்கள். மூன்ருவது பரிசுக்கான டிக்கட்டை கல்குடா எம், பி. திரு. கே. டபிள்யு. தேவநாயகம் இழுப்பார்.

## போதனுமொழி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறுவர்களின் போதனுமொழியைத் தெரிவுசெய்யும் உரிமை பெற்ருேருக்கு வழங்கப்படுவது கண்டனத்துக்குரியதென்றும் இந்த விஷயத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடம் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கூறும் ஒருதீர்மானம் சமீபத்தில் நடைபெற்ற உரும்பராய் தமிழரசுக்கட்சிக் கிளைக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

உரும்பராய் உபதாபாற் கந்தோரை உயர்தரத்தபால் நிலையமாக மாற்றி அமைக்கும்படி தபால் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் மற்ருெருதீர்மானமும்நிறைவேறியது.

## இன்னும் நிவாரணம் இல்லை!

திருக்கோணமலை, சனி

1964-ம் ஆண்டு நிகழ்ந்த சூருவளியின் விளைவிஞல் தங்கள் குடும்பத் தலைவர்களை இழந்த மீனவர் குடும்பங்களுக்கு இன்னும் நிவாரண உதவி இதுவரை வழங்கப்படவில்லை என்பது பற்றி அண்மையில் நடைபெற்ற திருக்கோணமலை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் மூதூர் எம் பி. திரு. முகமது தெரிவித்தார். இது பற்றி மீன்பிடி இலாகாவுடன் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பதாக இணைப்புக் குழுவின் தலைவரான அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா வாக்குறுதியளித்தார்.

## ஸ்ரீமதி பண்டிட்

மெல்போன், மே 21

இந்தியாவைத் தாக்கியதன் மூலம் சீனு பெருமிதம் பெற்றிருந்தபோதும், ஆசியாவில் அதற்கு பெரும்செல்வாக்கு ஏதும்கிடையாது என முன்னுள் ஐ. நா. மகாசபைத்தலைவியான ஸ்ரீமதி விஜயலட்சுமிபண்டிட் இங்கு கூறினுர்.

அணுசோதனை காரணமாகவும் சீனுவுக்கு செல்வாக்கு ஓங்கவில்லை என்ருர் அவர்,

ஸ்ரீமதி பண்டிட் ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சின் அழைப்புக்கிணங்க அங்கு 18 நாள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டிருக்கிருர்.

## ஷோம்பே..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் உள்ள ஷரத்தாகும்,

ஆனுல் ஷோம்போநீண்ட காலம் ஐரோப்பா விருந்தார். வைத்திய காரணங்களுக்காகவே தாம் நாட்டை விட்டுச் சென்றிருநததாக அவர் கூறினுர்,

எனினும அவரை அகற்றுவதற்குச் சாதகமாக 96 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் பார்லிமெண்டில் கிடைத்தன.

பி டி ஸி

## சிவலிங்கம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ய்ச்சி நிலையங்களில் கந்தரோடையும் ஒன்று என இலாகாவினுல் கணிக்கப்பட்டுள்ளது. மிகவும் கவனமாக ஆராய்ச்சி நடை பெற்று வருகிறது. கண்டெடுக்கப்படும் எந்தப் பொருட்களையும் தவற விடமாட்டோம் பயிற்சிபெற்றவர்களே ஆராய்சி செய்து வருகின்றனர்.

தென்னிலங்கையிலிருந்து சிங்கள யாத்திரிகர்களும், புத்த குருமார்களும், பாடசாலை மாணவர்களும், தினமும் புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடத்தை பார்வையிட்டு வருகின்றனர்.

நேற்றுக் காலை தனிப்பட்ட பஸ்ஸில் யாழ்ப்பாணம் வந்த புத்த குருமார்களும், அங்கு சென்றுபார்வையிட்டனர்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவர்களை மதமாற்றம் செய்ய முயலமாட்டார்கள்.

எப்படியும்முதலில் சைவர்கள் இதை நன்கு அறிய வேண்டும். ஈழத்திலேமுதல் முதலாக நடைபெறும் சேக்கிழார் விழாவைத் தொடர்ந்து ஆங்காங்கே பெரிய புராண வகுப்புகளை நடத்தி சைவத்தின் மாண்பினையும், சைவர்கள் எப்படி வாழ வேண்டுமென்பதனையும், சைவர்களுக்கு உணர்த்தினுல், அவர்களிடையே நாத்திகம் குறைந்து புதுமலர்ச்சி ஏற்படுவதுடன், 'மேன்மை கொள் சைவநீதி' யின் பெருமையினை உலகம் உணர்ந்து நல்ல பயனைப் பெற முடியும்.

ஈழத்தில் முதன் முதலாக இவ்விழாவினை நடத்துபவர்களை சைவஉலகம்நன்றியுடன் போற்றும். வாழ்க அகில இலங்கை சேக்கிழார் மன்றம்!

° ° °

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன், நிலவுலாவிய நீர்மலி வேணியன், அலகில் சோதியன் அப்பலத்தாடுவன், மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்,

—சேக்கிழார் பெருமான்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# வரி விளம்பரம்

WANTED

TEACHERS

Wanted bookeekping / commerce teachers for immedi atc engagement. United Institutes, Nelliady, Karaveddi.

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இருைம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

மோட்டார் இயந்திர சாஸ்திரம்

மோட்டார் இயந்திரங்களைப் பற்றி மிகவும் நுணுக்கமாகப் பாடங்கள் இலவசமாகச் சொல்லிக்கொடுக்கப்படும். வகுப்புகள் ஆரம்பம் ஜூன் முதலாம் திகதி. விபரங்களுக்கு: மோட்டார் விளையட்டுக்கழகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 370

வகுப்புக்கள்

கலை/விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ்/ஆங்கிலச் சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும் 44 வருட ஆசிரிய அனுபவமுள்ளவராலும், சிங்களத்துக்கும்/தையலுக்கும் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, ஸ்தாபிதம் 1924, பருத்தித்துறை. (372)

மாலை வகுப்புக்கள்

கலை/விஞ்ஞானம் / வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) தையல்/சிங்களம் ஆகியவற்றிற்கு காலையிலும், பாடசாலை செல்லும் மாணவ/மாணவிகட்கு மாலையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 6-ம், 7-ம், 8-ம் வகுப்பு மாணவர்களுக்கும் மாலை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, வதிரி, கரவெட்டி. (373)

### தேவை

கடைப்பொறுப்பாளர்

ஆங்கிலம் பேசக்கூடிய பிணைப்பணம் செலுத்தக்கூடிய கடைப்பொறுப்பாளர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ராணி மருந்துச்சாலை. 230, பிரதான வீதி, சுன்னுகம். (374)

### விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள EY பின்பகுதி செவளெற் டீலக்ஸ் மொடல் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். கே. வேலும்மயிலும், டிஸ்பென்சரி ரோட், வல்வெட்டித்துறை. 327

பொருளியல் மாதிரி வினுவிடைகள்:-

பொருளியல் (54 மாதிரி வினு விடைகள்) G. A. Q. A./L, பரீட்சைகளுக்காக வெளியிடப்பட்டுள்ளது. விலை 12-00, தபாற்செலவு 1-50. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 379

நெசவாளர்கள்

நெசவாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். திருமதி மனேன்மணி வைரவநாதன், திருமதி தில்லையம்பலம், மேற்பார்த்து, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. 380

### நன்றி நவிலல்

இரணைதீவிலிருந்து காணுமற்போன எனது வள்ளத்தை அடைச்சவேலி என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வள்ளத்தைக் கண்டெடுத்து பாதுகாப்புடன் கட்டிவைத்தவர்கள் தயவுசெய்து என்னுடன் தொடர்புகொண்டால் சன்மானம் அளிப்பதுடன் பெருமகிழ்ச்சியும் அடைவேன். ஏ. எஸ். சண்முகம், வியாபாரி, பிரஸாத் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். 381


"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெமி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.



தேசியப்பற்று உடையவராயிருங்கள்

நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்

குண்டசாலை அரிசியை

சாப்பிடுங்கள்.

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.

ஏனென்ருல் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

கொழும்பு விநியோகஸ்தர்:

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி

181, பழைய சோனக தெரு, கொழும்பு—12
தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கண்டி விநியோகஸ்தர்:

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.

கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:

செரல் புறடக்ட்ஸ் உற்பத்தி ஆலை

குண்டசாலை, குருதேனியா.

தொலைபேசி: 808


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பகுதிகளில் கூடுதலான மீன்பிடிப்பு

## மீன்பிடி இலாகா டைரக்டர் அறிக்கை

கொழும்பு, சனி

கடந்த நான்கு வருட காலமாகக் கூடுதலான மீன்களைப் பிடிப்பதில் யாழ்ப்பாணம் முதலிடத்திலிருந்து வந்துள்ளது கல்முனை இரண்டாவது இடத்தை வகித்து வந்துள்ளது. முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கடந்த வருடத்தில் மீன்பிடி நிலைமையில் மாற்ற மேற்பட்டுள்ளது. நீர்கொழும் நான்காம் இடத்தை வகித்துள்ளது.

மீன்பிடி இலாகாவின் 64 65ம் வருடாந்த நிர்வாக அறிக்கையில் டைரக்டர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

காலி, மூதூர், தொடந்துவ ஆகிய இடங்களை மற்றுமிடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மீன்பிடி நிலைமை பின்னோக்கிச் சென்றுள்ளதை அறியமுடியுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

1964ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வடமாகாணத்தில் வீசிய சூறுவளி காரணமாக வடக்கு, கிழக்குமாகாணங்களில் மீன்பிடித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

REGAL—JAFFNA
NOW SHOWING!
Charles Bronson - Susan Oliver
in
GUNS OF DIABLO
(M.G.M's
Thrilling action Film)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
N.D. ராமராவ் K.A. தங்கவேலு
நடித்த
மேதாவிகள்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி


## சிறிமாவின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவில்லை. இருந்தும் நான் வெளிநாடுகளிலிருந்த போது நாட்டின் நலனுக்காகவே காரியம் ஆற்றினேன். அதன்பலனை இப்போது அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்ரீமதி பண்டாரநாயகா தமது நிலைமையை விளக்கிக் கூறுகையில் நேருஜியின் அழைப்பின்பேரிலேயேதாம் இந்தியா சென்றதாகவும் அவர்களின் அன்பை துர்ப்பிரயோகம் செய்யக்கூடாதென்பதற்காக சென்னைக்கு போகவும் சென்னையிலிருந்து திரும்பி வரவும் மட்டும் அரசாங்க செலவில் தாம் விமானப்பயணம் செய்ததாகக் கூறினார்.

கடைசி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

24-ந் திகதி முதல்
கிங்ஸ்லி பிளாஸா நவா
வெலிங்டன் விஜயா
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

# சிவலிங்கம் இல்லை, டகோபா தூண்கள் தான்

## கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சிபற்றிகமிஷனர்விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தரோடையில் நடைபெற்றுவரும் புதைபொருள் ஆராய்ச்சியின் போது சிவலிங்கம் காணப்படவில்லையென்றும், சிவலிங்கம் என்று கூறப்பட்டது வெறுங்கல்லு என்றும், புதைபொருள் ஆராய்ச்சி கமிஷனர் டாக்டர் சி. ஈ. கொடகும்பரா நேற்று தெரிவித்தார்.

டாக்டர் கொடகும்பரா யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேரீணன் அபயசேகரா, காரியாதிகாரிகள் திருவாளர்கள் ரி. முருகேசம்பிள்ளை, எஸ். சிவஞானம் ஆகியோருடன் சென்று, கந்தரோடையில், புதைபொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடத்தை பார்வையிட்டனர்.

டாக்டர் கொடகும்பரா மேலும் தெரிவித்ததாவது: நிலத்தை தோண்டும் பொழுது முதலில் ஒரு பொருள் தோன்றியது, அது சிவலிங்கமாக இருக்கலாம் என அங்குள்ளவர் கருத்து தெரிவித்தனர். முழு உருவமும் தோண்டப்பட்ட பின்னர் அது வெறும் கல் என்பது தெரிய வந்தது. உண்மையில் சிவலிங்கம் அந்த இடத்தில் காணப்படவில்லை.

அந்நேரத்தில் அங்கு மேற்பார்வையாளராக கடமையாற்றியவர், கந்தையா என்ற ஒரு தமிழர். அங்கு வேலை செய்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர் இந்து மதத்தவர்கள் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். புதைபொருள் ஆராய்ச்சிக்காக நூறு குடும்பங்கள் அந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்ற பிரச்னை ஏழவே இல்லை. ஏனெனில் அரசாங்கம் தற்பொழுது ஆராய்ச்சி நடத்தும் இடத்தில் ஆராய்ச்சி முடிவடைய குறைந்தது மூன்று வருடங்கள் செல்லும்.

அதுவரை குடிபெயர்க்கும் பிரச்னை ஏழமாட்டாது. ஆதலால், அப்பகுதி மக்கள் பரபரப்பு அடையத் தேவையில்லை.

இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சியில், புத்த குருமாரின் கல்லறைகளின் தூபிகளும், பெரிய டகோபா, சின்ன டகோபா ஆகியவற்றின் தூபிகளும், சில மணிகளும், சில நாணயங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

அவ்விடத்தில் டகோபா இருந்ததற்கான அடையாளமான கட்டடங்களும் தென்பட்டிருக்கின்றன.

இரண்டு மாதங்கள் சென்ற பின் அதே காணிக்குள் அங்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் பொருட்களின் பொருட்காட்சி ஒன்று நடைபெறும், இப்பொருட்காட்சிக்கு, மந்திரிகளும், பாராசமன்ற அங்கத்தவர்களும் ஞமூகமளிப்பார்கள்.

இலங்கையிலுள்ள மூன்று முக்கிய புதைபொருள் ஆரா

(5-ம் பக்கம் பார்க்க)

# 8 நாடுகள் இலங்கைக்கு உதவி அளிக்கும்

## 5 கோடி டாலர் இப்போது தேவையென மதிப்பீடு

கொழும்பு சனி

**ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான், ஹாலந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய எட்டுநாடுகள் இலங்கைக்கு பொருளாதார உதவி அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளன.**

இவைகள் உலகவங்கியின் பொருளாதார ஆலோசனைச் சபையிலுள்ளநாடுகளாகும்.

இருதினங்கள் இந்த எட்டு நாடுகளிடையே நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து, 5 கோடியாக இலங்கைக்கு இப்போது தேவையென உலகவங்கி மதிப்பீடு செய்திருக்கிறது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்தி தேவைபற்றியும் பரிசீலனை செய்யப்பட்டது. ஒவ்வொருநாடும் இந்தத்திட்டத்துக்கு எவ்வளவு உதவிசெய்ய முடியும் என்பதுபற்றி விரைவில் பரிசீலிக்கப்படவிருக்கின்றன.

இந்தியா, இத்தாலி, ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பார்வையாளராகக் கலந்துகொண்டனர்.

இலங்கைத் தூதுகோஷ்டிக்கு திரு. காமினிகொறியா தலைவராகக் கலந்துகொண்டார்.

## அவசரகால . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டில் ஆம்பித்துவைத்துப் பேசுகையிலேயே திரு. மைத்ரிபாலா இப்படியாகச் சொன்னார்.

'எதிர்க்கட்சிக்கு நாட்டில் கூடிக்கொண்டுவரும் ஆதரவைக் கட்டுப்படுத்துவதற்கே இந்த அவசரகால நிலைமை நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினருக்கு நாட்டிலுள்ள ஆதரவு மேதினக் கூட்டத்தின் மூலம் அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கும். ஊழல்களையும், சலுகைகளையும் மூடிமறைப்பதற்கும் இந்த அவசரகால நிலைமை பயன்படுகிறது' என்றும் திரு. மைத்திரிபால சேனநாயக்கா மேலும் பேசுகையில் கூறினார்.

### டாக்டர்பெரேரா

டாக்டர் என். எம், பேரேரா இந்தவிவாதத்தின் மீது பேசுகையில் பத்திரிகைத்தணிக்கையை ரத்துச் செய்யலாமென்றும், நீடிப்பதற்குக்காரணமில்லையென்றும் சொன்னார்.

அவர்மேலும் பேசுகையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் இந்தமாத முடிவில் நடைபெறவிருப்பதால், தேர்தல் பிரசுரங்களையும். சுவரொட்டிகளையும் அவசரகால நிலைமைச்சட்டம் நீடிப்பதால் அபேட்சகர் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறதென்று கூறினார்.

வண. நரதிதேரோ சதிமுயற்சி சம்பந்தப்பட்டஎதிரிகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று பார்த்தபோது அவர்கள் வைக்கப்பட்டிருக்கும் நிலையைப் பார்த்து கண்ணீர் வடித்ததாகக் கூறினரென்றும் டாக்டர் பெரேராதெரிவித்தார்.

### தேசிய ஒற்றுமையை குலைக்கும் முயற்சி

டாக்டர்நாகநாதன் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில், தேசிய ஐக்கியத்தைக் குலைக்க எதிர்க்கட்சியினர் முயற்சி செய்கிறார்கள். நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவும், நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்கவும் அரசாங்கத்துக்கு உதவும் நோக்கத்துடனேயே தமிழரசுக்கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்தது. நாட்டில் இன மத துவேஷத்துக்கெதிராக தக்க சட்டப்பாதுகாப்பு ஏற்படும் வரை நாட்டில் அவசரகால நிலைமை அமுலில் இருக்க வேண்டியஅவசியல்என்றார்.

திருவாளர்கள் பீட்டர் கெனமன், பர்னட்சொய்சா ஆகியவர்களும் பேசினார்கள். கோரமின்மையால் சபைஒத்திவைக்கப்பட்டது. அவசரகாலநிலை சம்பந்தமாகவிவாதம் கோரமின்றி ஒத்திவைக்கப்படுவது இது இரண்டாவதுதடவையாகும்.

## மரண அறிவித்தல்

### அன்னம்மாள்

அராலிதெற்கு முருகமூர்த்திகோவில்பூசகர் கணேசக் குருக்களின் தாயாரும், கதிரேசக் குருக்களின் அன்பு மனைவியாருமாகிய அன்னம்மா காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக அராலி மயானத்திற்கு இன்றுகாலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 386

## சுற்று விஜயம்

கொழும்பு, சனி

போக்குவரத்து மந்திரி திரு மொண்டேகு ஜெத்விக்கிரமா ஜூன் மாதம் 21-ம் திகதி முதல் 25-ம் திகதிவரை வடமாகாணத்திலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்வார்.

வீடமைப்பு மந்திரி திரு. முகமட் இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார்.

## திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் பராபவ ஞு வைகாசி மாதம் 13-ம் திகதி (26-5-66 வியாழக்கிழமை இரவு 7-37 தொடக்கம் 9-45 வரை வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| திரு. C. சின்னத்துரை (யாழ்ப்பாணம் தபாற் கந்தோர் மேற்பார்வை அதிகாரி) அவர்களது புத்திரன் திருவளர் செல்வன் பாலசுப்பிரமணியம் B. A. Hons. (Cey.) அவர்களுக்கும் | திருமதி A. S. கந்தையா (கோண்டாவில் கிழக்கு அவர்களின் புத்திரி திருவளர் செல்வி ராஜேஸ்வரி அவர்களுக்கும் |

திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

177 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

மணமக்கள் பெற்றோர்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 6ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org